# சுதந்திரன்

SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2009
சித்திரை 2
ஜமா. அவ். 3
புதன் (12-4-1978)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 88
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 35


● சன்சோனி விசாரணை நடைபெறும்போதே யாழ்ப்பாணத்தில் இப்படி நடந்தது

# தலைவர் 'அமிரை' பழித்தான் பொலீஸ்காரன்

# அதை தட்டிக் கேட்டார் ஒரு தமிழ்க் கிழவர்!!

## அவருக்கு அடி உதை! ஆஸ்பத்திரியில் அனுமதி!

யாழ்ப்பாணத்தில் பொலீசாரின் அட்டூழியங்களைப்பற்றி சன்சோனி ஆணைக்குழு விசாரணை நடத்திவரும் அதே சமயத்தில் யாழ்ப்பாணத்தில் ஒரு பொலீஸ்காரனின் அட்டூழியம் நடைபெற்றிருக்கிறது. தமிழ்சமுதாயத்தின் தலைவரும், எதிர்க்கட்சித்தலைவருமான திரு. அமிர்தலிங்கம் அவர்களைப் பற்றி இழித்தும் பழித்தும் தரக்குறைவாக ஒரு பொலீஸ்காரன் பேசியிருக்கிறான். இதைக் கேட்டுக் கொண்டிருந்த முதியவரான தமிழ் அன்பர் ஒருவர் மனம் பொறுக்க முடியாமல், தமிழர்தலைவரைப்பற்றி தரக்குறைவாகப் பேசியதை வாபஸ் பெறும்படி கோரியிருக்கிறார். அப்படிக்கோரிய கிழவர் பொலீஸ்காரரால் அந்த இடத்திலும்பின்னர்பொலீஸ்நிலையத்திலும்தாக்கப் படடிருக்கிறார். தாக்குதலுக்குள்ளான தமிழ்க்கிழவர் இப்போது சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நெஞ்சு குமுறும் செய்தி பற்றி நமக்குக் கிடைத்த தகவல் வருமாறு:-

வெளியூரைச் சேர்ந்த முதியவர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு ஒரு அலுவலாக வந்தவர் தனது அலுவல் முடிந்த பின்னர் காங்கேசன் துறை வீதி வழியாக பழைய வை.சி.சி.கு.கடைப்பக்கமாக நடந்து சென்றுகொண்டிருந்தார் அவரது கையில் ஒரு புத்தகம் இருந்தது. அதன் அட்டையில் தமிழினத் தலைவர். திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களின் அழகான படமொன்று ஜொலித்துக் கொண்டிருந்தது. அண்மையில் வெளிவந்த புத்தகம் அது. அதிலே தலைவர் என்ன கூறியிருக்கிறரென்பதை அறிவதற்காக அந்தக்கிழவர் ஆர்வத்துடன், புத்தகத்தை வாங்கிக் கையில் தாங்கியபடி சென்றுகொண்டிருந்தார்.

அப்போது அந்த வழியாக வந்த பொலிஸ்காரன் ஒருவனின் கண்களில் கிழவரின் கையில் இருந்தபுத்தகத்தின் அட்டை பட்டிருக்கிறது. திரு. அமிர்தலிங்கத்தின் அழகான படம் அவன் கண்களை குத்தியிருக்கிறது. அதைப் பார்த்து விட்டு, தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களைப்பற்றி இழித்தும், பழித்தும் தரக்குறைவாக அவன் சிங்களத்தில் பேசியிருக்கிறான்.

சிங்களம் நன்கு விளங்கும் ஆற்றல் உள்ள இந்த முதியவருக்கு தமிழ்த் தலைவனைப் பற்றி பொலிஸ்காரன் தரக்குறைவாகத்திட்டியதும்ஆத்திரமும் கோபமும் பொத்துக் கொண்டு வந்திருக்கிறது; வேதனை வீரமாகமாறியது. முதியவர் உடனடியாக பொலிஸ்காரனைப்பார்த்து, ''நீகூறியதைவாபஸ்வாங்கு'' என்று சிங்களத்தில் கூறியிருக்கிறார். தமிழ்க்கிழவனின் உணர்ச்சிக்குமுறலை கேட்ட பொலீஸ்காரன் கிழவருக்கு அந்த இடத்தில் அடித்திருக்கிறான். அடித்தது மட்டுமன்றி, கிழவனைப்பற்றி இழுத்து பொலீஸ் நிலையம் கொண்டு சென்று அங்கும் அவர் தாக்கப்பட்டிருக்கிறார்.

இந்த வீரக்கிழவர் இப்போது பொலிஸ்காரனால் தாக்கப்பட்ட காயங்களுக்கு சிகிச்சை பெற்று வருகிறார்.

தமிழ் மண்ணின் தலைவனைப் பழித்தவனை தெரிந்து அவன் காக்கிச்சட்டைக்காரன் என்றாலும் இளம் சிங்கங்கள் மட்டுமல்ல-முதுமை தட்டிய கிழச் சிங்கங்களும் கிளர்ந்தெழுகின்ற காலம் உருவாகிவருவதை இச்சம்பவம் எடுத்துக்காட்டுகிறதல்லவா?

## வண்ணை ஆனந்தன் கொடுத்த 'டோஸ்'

கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொள்ள வரும்போது கார் விபத்தொன்றில் சிக்கிய திரு. வண்ணை ஆனந்தன், இப்போது யாழ் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவருகிறாரல்லவா! அவரைப் போய் இன்ஸ்பெக்டர் குருசாமி பார்த்தாராம். பார்த்து விட்டு, வண்ணையிடம், விபத்துக்குக்காரணமான காரோட்டி பற்றியும் விபரம் தரும்படியும் அந்த நபர்மீது தான் சரியான நடவடிக்கையெடுக்கவிருப்பதாகவும். இன்ஸ்பெக்டர் குருசாமி கூறினாராம், அதற்கு வண்ணை இப்படி பதிலளித்தாராம்.

''நானும் ஒரு தமிழன், அந்தக் காரை ஓட்டியவனும் ஒரு தமிழன். நாம் இருவரும் நமக்குள் பேசி ஒரு சமரசத்திற்கு வருவோம் பொலிஸ் நிலயத்துக்கு வரமாட்டோம். நன்றி சென்றுவாருங்கள்!''

இவ்வாறு முகத்திலறைந்ததுபோல வண்ணை கூறவே இன்ஸ்பெக்டர் குருசாமி அசடு வழிய அங்கிருந்து அகன்றாராம். இதை தம்மைப்பார்க்க வந்தவர்களிடம் வண்ணையே கூறிச் சிரித்தார்.

## மட்டக்களப்பில் கிளைகளை நிறுவி அமைப்பை பலப்படுத்த நடவடிக்கை குழுவின் ஏற்பாடு!

எதிர்வரும் ஏப்ரல் 30ம் திகதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் புதிய அமைப்பு விதிகளின்படி புதிய பொதுச் சபையின் முதலாவது கூட்டம் வவுனியாவில் நடைபெற விருக்கிறது. அதற்கு முன்னர் மட்டக்களப்புத் தொகுதியில் கூட்டணிக் கிளைகளையும், தொகுதிக்கிளைகளையும் நிறுவி இயக்கத்தைப் பலப்படுத்த கூட்டணியின் நடவடிக்கைக்குழு அதன் 8-4-78 கூட்டத்தில் விசேட ஏற்பாடுகளை செய்திருக்கிறது.

இந்தப்புதிய ஏற்பாடுகளின்படி மட்டக்களப்பு பா.உ. திரு.செ. இராசதுரை அவர்களே தொகுதி அமைப்பாளராக இருக்கும் அதே சமயம் திருவாளர்கள் கவிஞர் காசி ஆனந்தன், சட்டத்தரணி சாம் தம்பிமுத்து, முன்னாள் மாநகரசபை உறுப்பினர் இரா. அம்பலவாணர், ஜோசெப் ஆகியோர் துணை அமைப்பாளர்களாக நடவடிக்கை குழுவினால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். இதன் மூலம் மட்டக்களப்பில் கூட்டணி ஆதரவாளர்களிடையே ஒற்றுமையை வளர்க்கவும், கிளைகளை அமைத்து இயக்கத்தைப்பலப்படுத்தவும் வழியேற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மட்டக்களப்பு பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு திருகோணமலையில் கூடிய நடவடிக்கைக் குழுவினால் அனுப்பிவைக்கப்பட்ட 'நால்வர் குழுவின்'' ஆலோசனையின் பேரிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## "செல்வா சுனையை" பாதுகாப்போம்!

### ரேச் தேவாஸ் ஆசை!

"மூதறிஞர் தந்தை செல்வா அவர்களின் நினைவாலயத்துக்கு அத்திவாரம் வெட்டப்பட்ட இடத்தில் நன்னீர் சுனை வெளிப்பட்டது ஓர் அற்புதமாகும். இந்த 'செல்வா சுனை' வந்த இடத்தையும் பாதுகாத்து அந்த நன்னீரைக் கொண்டு நினைவாலயம் அமையவிருக்கும் இடத்தை பூங்காவாக, குளிர்ச்சியான இடமாக மாற்ற வேண்டும். எனவே தந்தை 'செல்வா சுனை'யையும் பாதுகாக்கும் அதேசமயம், நினைவாலயக் கட்டடத்தையும் கட்ட ஏற்பாடு செய்யும்படி செல்வா அறங்காவல் குழுவினரைக் கேட்டுக் கொள்ளுகிறேன்"

—இவ்வாறு 80வயது நிறைந்த முதியவரும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் துணைத் தலைவரும், தந்தை செல்வாவின் நெருங்கிய நண்பருமான மூதூர் ரேச் தேவாஸ் தனது ஆசையை வெளியிட்டுள்ளார்.

# தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரே அமைப்பாக இயங்கும்

## புதிய யாப்புக்கு பொதுச்சபை அங்கீகாரம்

தமிழர் விடுதலைக் கூட்டணி பரவலான ஜனநாயக அமைப்பாகவும், அதே சமயம் கட்டுப்பாடான இறுக்கமுள்ள ஒரே அமைப்பாகவும் வடிவம் பெறுகிறது கூட்டணிக்கு முறையான அமைப்பு வடிவம் தரும் புதிய யாப்பு, யாழ்ப்பாணத்தில் 8-4-78ல் மூதூர் ரேச் தேவாஸ் அவர்களின் தலைமையில் கூடிய பொதுச்சபை கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது,

இந்தப் புதிய யாப்பின்படி இதுவரை வெவ்வேறு கட்சிகளின் கூட்டமைப்பாக இயங்கிவந்த தமிழர் விடுதலைக் கூட்டணி இனி ஒரே தலைமையைக் கொண்டதாக ஒரே விடுதலை ஸ்தாபனமாக இயங்குவதற்கு வழிவகுக்கப்பட்டிருக்கிறது. புதிய யாப்பின்படி கூட்டணிக்கு தலைவர், சிரேஷ்ட துணைத்தலைவர், செயலதிபர், அமைப்புத் தலைமைச் செயலக செயலாளர், இரண்டு பொருளாளர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவார்கள். செயற்குழு 21 பேரைக் கொண்டதாக இருக்கும்:

கூட்டணியின் தொகுப்பு பின்வருமாறு அமையும். கூட்டணியின் அங்கத்தினர், மூலக்கிளைகள், தொகுதிக் கிளைகள், செயற்குழுவில் அங்கீகாரம் பெற்ற கிளைகள், தமிழ் இளைஞர் பேரவை, தமிழ் மகளிர் பேரவை, கூட்டணிப்பாராளுமன்றக் குழு, பொதுக்குழு,மத்திய செயற்குழு, வருடாந்த தேசிய மாநாடும், செயற்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இணைந்த நிறுவனங்கள்.

கூட்டணியுடன் இணைந்த நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது; ஆலோசனை கூறும் உரிமை மட்டுமே இருக்கும்.

இந்தப்புதிய யாப்பின் கீழ் எதிர்வரும்தேசிய மாநாட்டிலிருந்து கூட்டணி புதிய பொலிவுடன் இயங்கவிருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# தமிழ் அகதிகள் மறுவாழ்வு சபைக்கு அங்கீகாரம் வழங்க அரசு மறுப்பு!

## பாலுக்குங்காவல் பூனைக்கும் தோழன் நிலையில் ஜே. ஆர்.” கூட்டணி கொழும்புக்கிளைத் தலைவர் கண்டனம்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 1-4-78 சனிக்கிழமை மாலை 5 மணியளவில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் கிளைத்தலைவர் திரு. ஈழவேந்தன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ஆரம்பத்தில் தந்தை செல்வா அவர்களை நினைவுகூருமுகமாகவும், தீவிர தமிழ் உணர்ச்சியின் வடிவமாகத் திகழ்ந்து அண்மையில் காலமான மன்னாரைச் சேர்ந்த இளைஞன் திரு. கமிலஸ் அவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் 2 நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதை அடுத்து கிளையின் துணைச் செயலாளர் திரு. ந, தங்கராசா அவர்களால் கடந்த பொதுக்கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு சபையோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் பின்னர் ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டு சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது, இதன்பின்னர் பொருளாளர் திரு. க. சுப்பிரமணியம் அவர்களால் கிளையின் வரவு செலவு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு சபையோரால் ஏற்கப் பட்டது.

இதன் பின்னர் கொழும்புக் கிளைத்தலைவர் திரு. ஈழவேந்தன் அவர்கள் தலைமையுரையாற்றினார்கள். அவர் தமதுரையில் கூறியதாவது!-

“எமது கிளையின் ஆண்டறிக்கையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தோற்றம் பற்றி கூறப்பட்டுள்ளது. தலைமைப் பீடத்தில் கூட தீவிரம் போதவில்லையாயினும் விடுதலைக்குப் போராடும் ஓர் இயக்கத்தின் உறுப்பினர்கள் என்றவகையில் நாம் ஓர் குடும்பமாகச் செயல்பட்டு வருகிறோம். இயக்கத்தில் சில சிறுதவறுகள் நடந்தால் அதை நாம் பெரிது படுத்தக் கூடாது. தவறுகள் நிவிர்த்தி செய்யப்படத்தான் வேண்டுமேதவிர சிறு தவறுகளுக்கு பெரிய வடிவம் கொடுத்து நின்றால் இயக்கம் தான் முடிவில் அழிந்து ஒழிந்து விடும். ஆனால் இயக்கத்தை காட்டிக் கொடுப்பவர்களையோ இயக்கத்திற்குள் கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபடுபவர்களையோ நாம் இயக்கத்திற்குள் வைத்திருக்க முடியாது. அத்தகைய முயற்சியில் ஈடுபடுபவர்கள் இயக்கத்தை விட்டு வெளியேற்றப்படுவர். இது தவிர்க்க முடியாததாகும்.

1977ம் ஆண்டு ஜுலை மாதம்நடைபெற்றபொதுத் தேர்தலின் பின் ஏன் எமது இயக்கம் தீவிரமாக, சிறப்பாக செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. குற்றச்சாட்டில் உண்மையில்லை என்று தட்டிக் கழிப்பதற்கில்லை. ஆனால் நாம் இயக்கத்தை தீவிரப் படுத்தாது இன்னும் எமக்குள் முட்டிமோதிக்கொண்டு தான் இருக்கிறோம். இன்னும் எம்மத்தியில் சிலர் “தான் தனி வழி செல்வோம்” என்று வீரம் பேசிகிறார்கள். இவ்வாறு தனி மனிதனின் கெட்டித்தனம் காட்டும் செயலுக்கு எமது இயக்கத்தில் இடம் கொடுக்க முடியாது. இது இயக்கத்தைப் பலவீனப்படுத்துவதோடு இத்தகைய பலவீனங்கள் எம்மை அழிக்க நினைக்கும் எதிரிகளுக்குப் பலமாகவும் அமைந்து விடுகிறது.

இத்தகைய நிலையில்தான் கடந்த 30 வருடகால அரசியல் வரலாற்றில் எதிரிகள் எம்மை அடக்கி ஆள நாமோ எமக்குள்ளேயே முட்டி மோதிக்கொண்டோம். இத்தகைய இழுபறிகளையெல்லாம் வெளிநாட்டார் உன்னிப்பாக கவனித்தே வருகிறார்கள் என்பதை நான் சந்தித்த அநேக வெளிநாட்டு தூதுவராலய பிரமுகர்கள் என்னிடம்சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இலங்கையின் தற்போதைய அமெரிக்க தூதுவராகவிருக்கும் திரு. ஹோவார்ட் ஹிகின்ஸ் அவர்கள் 1960ம் ஆண்டு “Dilemmas Of Two Nations” என்ற தமது நூலில் ஓர் கட்டத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“தமிழர்களுடைய அரசியல் வரலாறானது சில தமிழ்த்தலைவர்கள் மத்தியிலான தனிப்பட்ட அரசியல் குரோத நடவடிக்கையாகவும் அதன் விளைவுகளாகவுமே காணப்படுகிறது.”

அதாவது தமிழன் தனது மூளை வளத்தைப் பயன்படுத்தி தன் தலையில் தனக்குத்தானே மண்ணை அள்ளிப் போட்டு தன்னைத்தானே அழித்துக் கொள்கிறான் என்ற பொருள்பட இந்த நூலாசிரியர் 1960ம் ஆண்டிலேயே எழுதினார். இது ஒன்றே எவ்வளவு உன்னிப்பாக இவர்கள் எம்மவரைப் பற்றிக் கணிக்கிறார்கள் என்பதற்கு சிறந்த அத்தாட்சியாகும், இதையிட்டு நாம் வெட்கி தலைகுனிய வேண்டும், அண்மையில் நல்லூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் மீது குற்றம் சுமத்தி சிலர் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையானது இன்னும் தமிழன் திருந்த வில்லை என்பதைத் தான் எடுத்துக்காட்டுவதாகவுள்ளது, இந்த தமிழன் என்றுதான் சரியான பாடம் படிப்பானோ தெரியவில்லை.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள் உரிமை கோரி போராட்டம் நடத்தினால் தெற்கே வாழும் தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள் என்ற காரணத்திற்காக வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் தமது உரிமைகளையெல்லாம் விட்டுக்கொடுத்து காலம் பூராவும் அடிமைகளாகவே வாழ வேண்டும் என்று எதிர்பார்ப்பது எந்த வகையில் நியாயபூர்வமானது? இது ஒரு நியாயமற்ற கூற்றாகும்.

இதைத்தான் தந்தை செல்வா அவர்களும் 1957ம் ஆண்டிலேயே வலியுறுத்திக் கூறினார்கள்.

“தமிழ்பேசும் மக்கள் தங்கள் உரிமை கோரி வடக்கிலும் கிழக்கிலும் குரல் எழுப்பினால் தெற்கேயுள்ள தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள். இதுவே இன்றைய உண்மை நிலை! பலாத்கார செயலின் மூலம் தமிழினத்தைப் பணியச் செய்துவிடலாம் என்பதுதான் ஆட்சியாளரின் அந்தரங்கத் திட்டமாயிருக்கிறது. இத்தகைய பயமுறுத்தல்களுக்கு நாம் அடிபணிந்து நமது சுதந்திரக் கோரிக்கையை விட்டுவிட முடியுமா? தெற்கில் உள்ள வெகு சில தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள் என்பதற்காக வடக்கில் உள்ள பரந்த தமிழினம் உரிமை கோராமல் ஊமையாய் வாழ முடியுமா? ஒருபோதும் முடியாது! என்பதே தந்தை எமக்கு இட்டுச் சென்ற அறிவுரையாகும்.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுச் சபையை ஒரு அறங்காவல்நிறுவனமாகஅங்கீகரிக்குமாறு நாம் கோரியபோது கொழும்பு மேற்கு இடைத் தேர்தல் காலத்தில் “பார்ப்போம்” என்று கூறியவர்கள் இடைத்தேர்தல் முடிந்த பின்பு இப்போது ஜே. ஆர். “தமிழ் அகதிகள் புனர்வாழ்வுசபையை (T R.R, O) ஒரு அறங்காவல் நிலையமாக அங்கீகரிப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை. ஆனால் எனது மந்திரிசபையினர் அதற்குத் தயாரில்லை” என்று கூறுகிறார். அதுவும் இப்போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்று இருக்கும் ஒருவர் கூறக்கூடிய வார்த்தைகளா இவை, என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

ஜே. ஆர். 1977 டிசம்பர் மாதம் 6ம் திகதி “இந்நாடு முழுவதும் யாவருக்கும் சொந்தம்” என்றார். இதை நம்பி ஒருவன் தனிச்சிங்களவர் வாழும் பகுதி யொன்றில் சென்று குடியேறினால் அவன் உயிருடன் தானும் திரும்புவானா? இது நடைமுறைச் சாத்தியமா? என்பதை சிந்தையிற் கொள்ள வேண்டும்.

ஆவணி கலவர காலத்தில் ஒரு நாள் தெஹிவளையிலிருந்த எனது தங்கைக்கு பாதுகாப்பு கோரி தொலைபேசி மூலம் அப்போதைய தெஹிவளை பிரதிநிதி திரு. ஜெயசிங்காவுடன் பேசியபோது “அவர்கள் எனது தொகுதியில் வாழ்பவர்கள் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டியது எனது கடமை” என்று காலையில் கூறியவர் அதே தினம் மாலையில் கூறினார், “என்னால் பாதுகாப்புக்கொடுக்க முடியாது. உமது தங்கையின் உயிர் விலைமதிப்புடையது என்று நீர் கருதினால் உடன் அழைத்துச் செல்லும்” என்றார். இப்படிப்பட்டவர்கள் தான் இலங்கை முழுவதும் அனைவருக்கும் சொந்தம் என்று கோஷம் போடுகிறார்கள்.

எப்படிப் பார்த்தாலும் தமிழன் தன் உரிமைக்குப் போராடினால் விளைவுகள் ஏற்படத்தான் செய்யும். போராட்டம் நடத்தினால் பாதிக்கப்படுவோம் என்ற உண்மை தெரிந்துதான் நாம் போராடுகிறோம். “சிங்களவரோடு இணைந்து அழிவதிலும் பார்க்க சிங்களவரை எதிர்த்து மடிவதே மேல்” என்பதே எனது அபிப்பிராயமாகும். எமது நிலை புற்றுநோய் போன்றது. அறுவை சிகிச்சை செய்யாவிட்டால் அழிவது நிச்சயம். ஆகவே அறுவைசெய்தே தீருவோம்.

நடப்பாண்டு நிர்வாகிகளாகபின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்!-திரு.ஈழவேந்தன் துணைத் தலைவர்:- திரு. அ. சாள்ஸ் செயலாளர்:- க. சிங்காரநாதன் துணைச்செயலாளர்:- க. ஊர்மிளா, பொருளாளர்:- க. சுப்பிரமணியம், துணைப்பொருளாளர்!- சி. சிவலோகநாதன் செயற்குழு உறுப்பினர்கள்!' ஆ.இரகுபதிபாலஸ்ரீதரன், க. துரைராஜா, பொன். பூலோகசிங்கம், வ. பத்மநாதன், ந, தங்கராசா, சோமேசுவரன், வே. அருணகிரி, இராஜமனோகரன், மண்டூர் மகேந்திரன், யோகசுந்தரம், து. புரட்சிமாறன், யோசேப், அருள் இராசேந்திரா, த. கோபாலசிங்கம், க. குலநாயகம், அல்போன்ஸ்மேரி, திருமதி அ. யோகசுந்தரம்,

இறுதியாக திரு. இரகுபதி பாலஸ்ரீதரன் அவர்கள் கொண்டுவந்த கூட்டணிபாராளுமன்ற உறுப்பினர்கள்முன்னர் எடுத்தமுடிவுக்கமைய முழுநேர ஊழியர்களாகப் பணிபுரிய வேண்டும்எனவும், தமிழீழத்தின் அடித்தளமாக விளங்கும் குடியேற்றத்திட்டங்கள் தொடர்பாக குளங்களைப் புனரமைத்தல், மரம் நாட்டல் போன்றபணிகளைச் சிரமதானம்மூலமும் தொண்டர் படைகள்மூலமும்ஆற்றுவதற்கான நடவடிக்கைகளில் கூட்டணித் தலைவர்கள் முழுமூச்சாக ஈடுபடவேண்டும் என்றதீர்மானமும்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமிழீழ நாட்டுப் பண்ணுடன் ஆண்டுப் பொதுக் கூட்டம் முடிவுபெற்றது.

தொருப்பு!

தகவல்! பொன். பூலோகசிங்கம்

---

## கூனித்தீவு ஆலய உற்சவம்

எதிர்வரும் சித்திரைமாதம் (10-4-78)திங்கள்கிழமை தொடக்கம் (14-4-78) வெள்ளிக்கிழமைவரை மேற்படி ஆலயத்தில் வருடாந்த திருவிழா ஆரம்பமாகும். 14-4-78 இரவு அம்பாள் ஆலயத்தின் முன்றிரில் சமய சொற்பொழிவுகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். அதிகாலை 3மணிக்கு சக்தி பூசையும் 6மணிக்கு தீமிதிப்பும் நடைபெறும்;

---

## புத்தாண்டு வாழ்த்து

நாங்கள் நாளும் நாட்டுக்கு நல்லன செய்வதற்கு ஆதரவு நல்கும ஆதரவாளருக்கும், வர்த்தகாகளுக்கும் எம் இதயபூர்வமான புத்தாண்டுவாழ்த்துக்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

---

## பிரித்தானிய கடற்படையின் சென்றகால ஊழியரும் நட்டஈடும்

பிரித்தானிய கடற்படைத்தளங்களில்,குறிப்பாக திருகோணமலையில், சேவையாற்றியவர்களில்- கணிசமானோர் தமிழர்கள், இவர்களின் சேவைக்காகபிரித்தானியகடற்படைஇலங்கை அரசிடம் கணிசமானபணத்தை ஒப்படைத்திருப்பதாகத் தெரிகிறது. ஆனால்பிரிட்டிசார் வெளியேறி இத்தனை ஆண்டுகள் கழிந்தும்பிரித்தானிய கடற்படையில் சேவையாற்றிய பழைய ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணத்தை [illegible] களை நாய்கள்போல் அவலப் படுத்துகிறது.

இதுசம்பந்தமாக முன்பு ஒரு தடவை, அதாவது 1967ல், இலங்கை அரசு ஒரு சுற்றறிக்கையும் வெளியிட்டது, இந்த ஊழியர் பற்றிய விபரம்திரட்டும்நோக்குடன் ஆனால், பலன் ஒன்றுமேயில்லை,

இதோ மறுபடியும் மேற் குறிப்பிட்டபடிவிபரம்திரட்டுகிறார்கள். இதில்வேடிக்கை என்னவென்றால் ஒருசில திணைக்களங்களே இதுபற்றியசுற்றறிக்கையைப் பெற்றுள்ளன. இதன் அர்த்தம்புரியாமல்திகைக்கிறார்கள் ஏனைய திணைக்களங்களில் சேவை செய்யும் பழைய பிரித்தானிய கடற்படை ஊழியர் பலர்.

எமது எதிர்க்கட்சித்தலைவரும், தமிழரின் தலைவருமான திரு. அமிர்தலிங்கம் இதுபற்றி ஆராய்ந்து பிரித்தானிய கடற்படையின் சென்றகால ஊழியர்கள் நிவாரணம்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். எமதுதிருகோணமலை பா.உ திரு. சம்பந்தன் அவர்களும் இதுபற்றி அக்கறை கொள்வாராக! —'பேரல்சிங்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் இனத்தின் அழிவுக்கு

# அடிப்படைக் காரணம் என்ன?

## வண. கரவையூர் செல்வம் கருத்து!

'கரவையூர் செல்வம்' அவர்களுக்கு என். பி. ஜெனியர் பெர்ணன்டோ சுதந்திரன் மூலம் 22-3-78ல் எழுதியிருந்த கடிதத்துக்கு கரவையூர் செல்வம் இங்கு பதிலளிக்கிருர்—

அன்பின் நண்பர் ஜெனிபர் அவர்களுக்கு எனது அன்பு கலந்த வணக்கம்!

தங்கள் மடல் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.

தமிழினத்துக்குள் ஒரு பகுதியினரை ஒரு சாதியாகப் பிரித்து, அவர்களுள் ஒருவளுக நின்று தங்களுக்குள்ள தமிழ்ப்பற்றைத் தாங்கள் வெளியிட்டமையைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன். நீங்கள் குறிப்பிட்ட சமூகத்திலும் இப்படிப்பட்ட தமிழ்ப்பற்றுக் கொண்டவர்கள் இருக்கிருர்களென்பது இனிப்பான செய்திதான்.

ஆயினும், ஓரினத்துள் ஒரு பகுதியினரை மட்டும் பிரித்துக் கூறியதை நான் விரும்பவில்லை. இந்த சாதிப்பிரிப்புத்தான் எமது இனத்தின் அழிவு.

தமிழினத்தின் இன்றைய நிலைக்குத் தமிழ்த் தலைவர்கள் தான் முக்கிய காரணமென்று நாம் எழுதியதைத் தாங்களும் 'ஓரளவு உண்மை' என்று ஏற்றுக் கொண்டீர்கள். நன்றி.

அதே போன்று, கரையோரப் பகுதிகளான நீர்கொழும்பு தொடக்கம் புத்தளம் வரை" தமிழ்மொழி 'செத்து' வருவதற்குக் காரணம் அப்பகுதிகளில் வாழ்ந்த கத்தோலிக்க குருமார்களும் ஆயர்களும் என்ற தங்கள் குற்றச்சாட்டை நானும் பெருமளவில் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் பெரும்பான்மையான தமிழ்ப் பேசும் குருமார்கள் இந்தக் கசப்பான உண்மையை ஏற்றுக் கொண்டது மட்டுமல்ல கண்டித்தும் கவலைப்பட்டும் இருக்கிருர்கள். இன்றும் கண்டிக்கிருேம், கவலைப்படுகிருேம்.

ஆனல், நீங்கள் குறிப்பிட்ட கரையோரப் பகுதிகள் கொழும்பு, சிலாப மறை மாவட்டங்களைச் சேர்ந்தன.

### கசப்பான உண்மை

மேற்கூறிய "இனமாற்ற"த்தை செய்தவர்கள் யார்?


தாங்கள் குறிப்பிட்ட பீரிசுகளும், பெர்ணுந்துக்களும், மொருயஸ்களும் கூறேக்களும் தானே? "தமிழ்ப் பேசும் சிங்களவர் தாம்" என்று தங்களைத் தாங்களே பெருமையுடன் கூறிக் கொள்ளும் "பரத குல மக்கள்" தானே?

அதேவேளை தாங்கள் குறிப்பிட்ட கரையோரப் பகுதிகளில் (நீர்கொழும்பு—புத்தளம்) இந்து மதத்தைச் சார்ந்த தமிழ் மக்கள் வாழவில்லையா? இன்னும் தங்கள் மொழியைக் காப்பாற்றவில்லையா? "பரத குலம்" மட்டும் ஏன் மாறியது? தங்கள் தனித்துவத்தை இவர்கள் ஏன் காப்பாற்ற முன்வரவில்லை?

### மொழி இன்று ஓர் அரசியல் 'பிரச்சினை

நமது நாட்டில் மொழி கட்சி அரசியலில் சிக்கி விட்டது. ஆகவே, அது முழுக்க முழுக்க ஓர் அரசியற் பிரச்சினையாகி விட்டது.

என்று நாம் சுதந்திரம் பெற்ருேமோ அன்றே எமது மொழிப்பிரச்சினை தொடங்கி விட்டது.



அன்றுதொட்டு தமிழினம் படிப்படியாகத்தள்ளப்பட்டு, ஒதுக்கப்பட்டு வந்தது. தமிழ்த் தலைவர்கள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ இந்த ஒதுக்கலுக்கு அடிகோலி விட்டனர்.

வடகிழக்குப் பகுதிகளில் வெறும் கட்சி அரசியலையே வளர்த்தனர்.

கடந்த தேர்தலில் கூட தமிழினம் ஒன்றுபட்ட அளவுக்குத் தமிழ்த் தலைவர்கள் ஒன்றுபடவில்லை. தமிழினத்தின் உரிமை வாழ்வுக்காக உயிரையும் கொடுக்கத் தயாராக இருந்த பல தலைவர்கள் தங்கள் தொகுதிகளை இளைய தலைமுறைக்கு விட்டுக்கொடுக்க முன்வரவில்லை.

கணிசமான தமிழ் மக்கள் வாழும் கொழும்பு, நீர்கொழும்பு, புத்தளம், சிலாபம், கண்டி, மலையகம் போன்ற பகுதிகளில் குடியிருக்கும் தமிழ்மக்களின் பிரச்சினை பற்றித் தமிழ்த் தலைவர்கள் எப்பொழுது கவலைப்பட்டார்கள்?

இப்பகுதிகளில் வாழும் மக்கள் சார்பாக தமிழரை (கடந்த தேர்தல் தவிர்த்து) ஏன் முன் நிறுத்த வில்லை?

### ஒற்றுமையின்மை

எம்மிடையே உள்ள சாதி வெறி தான் எமது அழிவிற்கு அடிப்படைக் காரணம். எமதுஇனத்தை வெவ்வேறு சாதியாகவோ சமூகமாகவோ பிரிக்கும் கீழ்த்தனம் நம்மிடையே வேரோடு அறுத்தெறியப் பட வேண்டும்.

நான் மேற்கூறிய சில குறைகள் உங்களையோ அன்றேல் நீங்கள் குறிப்பிட்ட 'குல'த்தையோ தாக்குவதற்காகவல்ல. நம்மையே நாம் விமர்சித்து நம்மிடையே உள்ள பிரிவினைகளை தகர்த்தெறிய வேண்டும்.

தாங்கள் குறிப்பிட்டது போல கரையோரத் தமிழினத்தை மட்டுமல்ல, 'தமிழினத்தையே' காப்பாற்ற வேண்டும்.

ஆவணி 77 இன அழிப்பு நீர்கொழும்பு — சிலாபம்— புத்தளம் கரையோர மக்களை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. ஏனைய பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் எவ்வளவு மிருகத்தனமாக தாக்கப்பட்டார்கள் என்று இப்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் சன்சோனி விசாரணையிலிருந்து அறிந்திருப்பீர்கள்.

அதற்காக, நீங்கள் கூறியது போல வெறும் இன உணர்ச்சியை ஊட்டி அல்ல, ஆனல், மனித அடிப்படை உரிமைகளை உணர்த்தி மக்களை ஒன்று சேர்க்க வேண்டும்.

இந்த அடிப்படையில் கத்தோலிக்க குருமார்கள் பலர் இன்று பணிபுரிகிருர்கள். இவர்கள் நீதி நிலவ உழைக்கிருர்கள். கட்சி அரசியலுக்கு அப்பாற் சென்று சேவை செய்கிருர்கள். இது அவர்களின் அழைப்பு. மறைபணி என்பது இவர்களின் நோக்கமாகும்.

ஆயினும், பதவிக்காகவும் பணத்துக்காகவும், புகழுக்காகவும் மனித அடிப்படை உரிமைகளை மற்றவர்களுக்கு மறுத்து அநீதியோடு சங்கமமாகி நிற்கும் சிலர் இக்குருமார் செய்யும் சேவையை வெறும் அரசியலாகவே கருதுகிருர்கள்.

தார்மீக ஆட்சியில் மனித அடிப்படை உரிமைகள் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பது தான் எமது வேண்டுகோள்.

இம்மடலை முடிக்கு முன்னர்-பெர்ணுந்து, கொஸ்தா, மொருயஸ், பீரிஸ், போன்ற பெயர்கள் நெய்தல் நிலத் தமிழர்களின் பெயர்கள் அல்ல! இவை போர்த்துக்கீயப் பெயர்கள் என்றுகூறி, தங்கள் போன்ற தமிழ்ப்பற்றும், அநீதியைக் கண்டு பொங்கியெழும் உள்ளங்களும் தமிழ் இனத்தில் தோன்ற வேண்டுமென்று கேட்டு அன்பு வணக்கம் கூறி விடை பெறுகிறேன்.

---

### மட்டுநகரில் இரும்புமனிதரின் சாகசங்கள்!

சாண்டோ சங்கிரதாஸ் அவர்களின் சீடராகிய சாண்டோ வே. கிறிதாஸ் அவர்கள் அளிக்கும் சாகசக காட்சிகள் 15-4-78 மாலை 7மணிக்கு மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.



திரு. சிவஞானசேகரம் அவர்கள் தமிழக ஆளுனர் பட்வாரியாவிடம் தமிழகமுதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களின் தங்கப்பதக்கத்தினையும் "சங்கீதபூசண்" என்னும் சிறப்புப்பட்டத்தினையும் பெறும்காட்சி. நடுவில் நிற்பவர் 'தெய்வம்படத்தில்மருதமலைமாமணியே பாடல்மூலம்பலரசிகர்களின்மனதை கவர்ந்தவரும்அண்ணுமலைபல்கலைக்கழகஇசைப்பேராசிரியருமான மதுரை சோமு அவர்கள்.

# எம். ஜி. ஆர். தங்கப்பதக்கம்

# பெற்று ஈழத்துக்கு

# பெருமைதேடித் தந்தவர்!

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் இசைபயின்று பல்கலைக்கழக இறுதியாண்டுத் தேர்வில் முதல் பிரிவில் 'சங்கீத பூஷண்' பட்டம்பெற்று, தமிழ் நாடு முதல்வர் எம். ஜி. ஆரின் தங்கப்பதக்கத்தை தமிழக ஆளுனர் பட்வாரியிடமிருந்து பெற்று தமிழ் ஈழத்துக்கு பெருமைதேடித் தந்திருக்கிருர் அளவெட்டியை சேர்ந்த வி. சிவஞானசேகரம்.

ஆரம்ப இசைக்கல்வியை அளவை இசைக்கலை மன்றத்தில் அளவையூர் சங்கீத பூஷணம் வி. கே. நடராசா சங்கீத வித்துவான். அ. திலலோகேஸ்வரன் பொன் முத்துக்குமாரு [சங்கீத பூஷணம்] ஆகியோரிடம் கற்று சங்கீதசபை நடாத்தி வரும் ஆசிரியர் தராதர தேர்ச்சிவரை சிறப்பு சித்தி பெற்ருர்.

பின்னர் அகில இலங்கை விவேகானந்த சபையினரின் புலமைப்பரிசில் பெற்று தென்னிந்தியாவில் திருப்பனந்தாள் ஆதினத்தில் திரு. எஸ். சுப்பிரமணிய முதலியரர் அவர்களிடம் பண்ணிசைப் பயிற்சிபெற்று சிறப்புத் தேர்ச்சி பெற்று ஆதீன முதல்வர் திருப்பெருந்திரு காசி வாசி முத்துக்குமாரதம்பிரான் சுவாமிகள் அவர்களால் "பண்ணிசை வாணர்" என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளாார்.

இவரது பண்ணிசைக் கச்சேரிகள் தென்னிந்தியாவில் பல பாகங்களிலும் நடைபெற்று உயர் திரு. கிருபானந்தவாரியார், காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஆகியோரது பராட்டுக்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து அண்ணுமலை பல்கலைகழகத்தில் திரு. மயிலம் வச்சிரவேலு முதலியார் அவர்களின் சீடர் திருப்பாம்புரம் ரி. எம். சிவசுப்பிரமணியபிள்ளை அவர்களிடமும் எஸ். வேணுகோபால் ஐயர் அவர்களிடமும் முறையாக இசை பயின்று பல்கலைக்கழக இறுதி யாண்டுத் தேர்தலில் முதல் பிரிவில் "சங்கீத பூஷண் | பட்டம் பெற்றுள்ளமையோடு அவ்வாண்டுக்கான தமிழ் நாடு முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களால் வழங்கப்படுஉ தங்கப் பதக்கத்தையும் தமிழ் நாட்டு ஆளுனர் பட்வாரியா அவர்களிடமிருந்து பெற்று தமிழ் ஈழத்துக்கே பெருமை ஈட்டிக் கொடுத்துள்ளார்.

தற்போது இவர் யாழ் ரசிகரஞ்சன சபை நடத்தும் இசைக் கல்லூரியில் இசை "ஆசிரியராக கடமை ஆற்றி வருகிருர். மேற்படி சபையினரால் இவ்வாண்டுக்கான இசைவிழாவில் இசைக் கச்சேரி நடத்தி மன்னூர் நாடாளுமன்ற உறுப்பினர் சூசைதாசன் அவர்களாலும் அனேக ரசிகர்களாலும் பாராட்டு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இவரது இசைக்கச்சேரியை கேட்கும் வாய்ப்பினை வெகு விரைவில் தமிழ் ஈழத்தில் அரங்கேற்றம்மூலமநடாத்தி இசை பிரியர்களின் ஆவலை பூர்த்தி செய்யவிருக்கிருர்.

---

### தமிழ் நாடக விழா

மத்திய வங்கித் தமிழ் இலக்கிய மன்றம் தமிழ் நாடகங்களுக்குப் புத்துயிர் அளிக்கும் நோக்குடன் தலைநகரில் நாடக விழா ஒன்றினை நடாத்த ஒழுங்கு செய்துள்ளது. நாடக மன்றங்கள், திணைக்களங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றிடமிருந்து தகுதியானதும், 60 நிமிடங்களுக்குள் நடித்து முடிக்கக் கூடியதுமான நாடகங்கள் கோரப்படுகின்றன. விழாவில் தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று நாடகங்களுக்கும் பண வடிவில் பரிசில்கள் வழங்கப்படும். மேலும் விபரங்கள் வேண்டுவோர் மன்றச் செயலாளரோடு உடனடியாகத் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தொடர்புகொள்ளும் முகவரி: செயலாளர், மத்திய வங்கி தமிழ் இலக்கிய மன்றம், இலங்கை மத்திய வங்கி. த.பெ.எண், 590, கொழும்பு-1

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.

# "1958ல் எமது மண்ணிலிருந்து எதிர்த்தாக்குதல் நடத்திேனும் 1977ல் எமது மண்ணிலேயே தாக்கப்பட்டோம்!"

## பெரியவர் விழாவில் தமிழினத்தலைவர் அமிர் முழக்கம்!

"இலங்கையின்ஏனைய தலைவர்கள் எல்லாம் தமிழ் இனத்தை ஒருசிறுபானமை இனமாகக்கருதிய காலத்தில் ஈழத்தின் தமிழ் இனம் சிறுபான்மை இனமல்ல அது ஒரு தனியான தேசிய இனம் என்பதை ஆதாரபூர்வமாக முதன் முதலில் எடுத்துக்காட்டிய பெருமை மறைந்த எம் தலைவர், தந்தை செல்வநாயகம் அவர்களுக்கே யுரியதாகும்."

மேற்கண்டவாறு கடந்த 3-4-78 திங்கட்கிழமை மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் நடைபெற்ற தமிழீழத்தந்தை செல்வா அவர்களின் எண்பதாவது வயது பூர்த்திவிழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள்குறிப்பிட்டார். விழாவிற்கு த.வி.கூ கொழும்புக்கிளைத் தலைவர் திரு. ஈழவேந்தன் தலைமை தாங்கினார்.

கடந்த ஆகஸ்ட் கலவரத்தின் பின்னர் கொழும்பில் நடைபெற்ற இத்தகைய ஒரு விழாவில் மண்டபமே நிறைந்துவழிய தமிழ்ப் பொதுமக்கள் கூடியது இதுவே முதல்தடவையாகும். "எத்தகைய இன்னல்கள் வந்தாலும் தந்தையின் அடிச்சுவட்டிலிருந்து இம்மியும் விலகோம்", என்பதை எடுத்துக்காட்டுவது போல் தலைவர்களின் உரைகளை செவிமடுத்த மக்கள் கரகோஷம்செய்தமை நெஞ்சைத் தொடுவதாக விருந்தது.

தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் தொடர்து பேசுகையில், கூறியதாவது:-

"கடந்த ஆகஸ்ட் கலவரத்தின் போது எமது சொந்தப் பூமியில் நாம் தாக்கப்பட்டோம். தாக்குதல் தெற்கிலே ஆரம்பிக்கப்படமுன்பு வடக்கில் தான் ஆரம்பிக்கப்பட்டது. உரிமை மறுக்கப்பட்ட இடத்தில் மட்டுமல்ல உரிமையோடு வாழ வேண்டிய இடத்திலும் தமிழன் தாக்கப்பட்டான். அநுராதபுரத்தில் தாக்கப்பட்டு வவுனியாவுக்கு மக்கள் வந்த போது வவுனியா மக்கள் அவர்களை உபசரித்தபோது தமிழீழம் கண்டோம் என்று கூறி ஆர்ப்பரித்தனர். அந்நியர் இந்த நாட்டுக்கு வர முன்பு எமது பகுதி மக்கள்



தென்னிலங்கையுடன் தொடர்புபட்டு இருக்கவில்லை. ஆங்கிலேயர் ஆட்சியில் தான் மலேரியாவால் மக்கள் பாதிக்கப்பட்டுஇடம் பெயர்ந்தார்கள். தேனீ தேனைச் சேகரித்து வைக்க யாரோ ஒருவன் அதை அபகரித்துச் சென்றது போல எமது மக்கள் சேர்த்து வைத்த சொத்துக்களையெல்லாம் சிங்களவெறியர் 1958லும் 1977லும் கொள்ளையடித்துச்சென்று இன்று உல்லாச வாழ்க்கை வாழ்கிறார்கள்.

சபதம்

எமது பகுதிமக்கள் எமது பகுதியிலேயே ஒரு நிலையான வாழ்வை அமைக்க வேண்டும். தந்தைசெல்வா தனிநாட்டுக்கோரிக்கையை 1975 காங்கேசன் துறை இடைத்தேர்தலில் முன்வைத்தாலும் அவர் அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே இக்கருத்தை மனதில் வைத்திருந்தார் என்பதை 1972ல் நான் அவருடன் தமிழகம்சென்றபோது அவர் தமிழக தலைவர்களுக்கு எடுத்துக் கூறியதிலிருந்து கண்டேன்.

தமிழ்த்தேசிய இனம் பூரணத்துவம் பெற்ற. சாதிபேதமற்ற சுரண்டலற்ற ஒரு சமுதாயமாக வாழவேண்டும் எனக்கனவு கண்டார். அதற்காக தமிழினம் ஒற்றுமைப்பட வேண்டும் என்று விரும்பினார். அவரது விருப்பம் அவரது வாழ்விலேயே ஈடேறியது. அவரது அடுத்த கனவான சுரண்டலற்ற சாதிபேதமற்ற சுதந்திரம் பெற்ற சமுதாயத்தை உருவாக்க உழைப்பதே இந்த நாளில் நாம் ஏற்றுக்கொள்ளக் கூடிய சபதமாகும்.

### செல்வா காட்டிய பாதையில் செல்வோம்!

இன்று மக்கள் மத்தியில் பலவித குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன, சரித்திரம் வாழலாமா என்ற கேள்விக் குறியுடன் தமிழ்மக்கள் தம் எதிர்காலத்தை எதிர்நோக்கிய வேளையில் தந்தை அரசியலில் இறங்கினார், இலங்கை சுதந்திரம் பெற பத்து ஆண்டுகளுக்கு முன்னரேயே 1938லேயே தமிழ் இனத்தின் நிலை குறித்து அவர் சிந்தித்தார். "தமிழ் இனம் வாழ வேறு ஒருவழியை அமைக்கவேண்டும்" எனக் கூறினார். இதைப் பின்னர் உணர்ந்துகொண்டே அருணசலம் மகாதேவா, க. நடேசபிள்ளை போன்றோர் சிங்களக் கட்சிகளிலிருந்து விலகினார்கள். தந்தைசெல்வா அவர்கள் தமிழ் இனத்திற்கு ஆற்றிய சேவைபோல் எந்த சிங்களதலைவரோ முஸ்லீம் தலைவரோ தமது சமுதாயத்திற்கு ஆற்றவில்லை, தன் இனத்திற்கு விசுவாசமாக வாழ்ந்தவர். நாம் யாரையும் வெறுக்கவுமில்லை அதேநேரம் எமது உரிமைகளை கபளீகரம் செய்ய யாரையும் அனுமதிக்கப்போவதுமில்லை" என்றார்.

### நல்லூர் சிவா

இதன்பின்னர் நல்லூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் தந்தையின் செயலாளராக அவரது இறுதிக் காலத்தில் கடமையாற்றிய திரு. அருள் இராசேந்திரன் எழுதிய, "தந்தைசெல்வாவிற்கு ஓர் அஞ்சலி" என்ற ஆங்கில



## 'அஹிம்சைதான் எம் வழி-ஆனாலும் வன்முறையிலிருந்தும் நமது மக்களைக் காக்கவேண்டும்'

—நல்லூர் சிவா

நூலை வெளியிட்டுவைத்துப் பேசுகையில், கூறியதாவது:-

"இந்த நூலை வெளியிட்டு வைப்பதில் நான் பெருமகிழ்வுகொள்கிறேன். தந்தையின் காரியதரிசியாகக் கடமையாற்றிய அருள் இராஜேந்திரன் அவர்கள் தந்தையின் முழுவாழ்க்கை வரலாற்றையும் வெளிக்கொணரக் கூடிய முறையில் ஒரு நூலை எழுதவேண்டும், ஏனெனில் தந்தையின் கடந்த 30வருட கால வரலாறு தமிழ்பேசும் இனத்தின் வரலாறு. பல ஆண்டுகளாக பிரதேசம், இனம், மதம், மலையகம், வடக்கு, கிழக்கு என வேறுபட்டுக் கிடந்த தமிழ்மக்களையெல்லாம் ஒன்று படுத்தியதோடு 1972ல் கட்சி அரசியலுக்கே அப்பாற்பட்ட முறையில் ஓர் மகத்தான ஒற்றுமையைஉருவாக்கினார்.

பெருந்தலைவர்கள் மறைந்தபின்பு எமது இயக்கம் பிளவுபடும் என பலர் எதிர்பார்த்தார்கள், பலர் நினைத்திருந்தார்கள். ஆனால் தமிழ் மக்கள் 1977 தேர்தலில் அவர்களுடைய எண்ணத்தில் மண்ணை அள்ளிப்போட்டார்கள். இன்னும் சிலர் முயல்கிறார்கள். இவர்களுக்கும் மக்கள் சரியான பாடத்தைப் புகட்டுவார்கள். எமது சுதந்திரதாகத்தை அடக்கத்தான் 1977ல் கலவரத்தை உருவாக்கினார்கள். கல்விகற்றவர்கள், பொறியியலாளர், வைத்தியர்கள் பலர் கொல்லப்பட்டார்கள். பல்கலைக்கழக மாணவர்கள் விரிவுரையாளர்கள் பலர் தாக்கப்பட்டார்கள். அத்துடன் அவர்களது அறிவுக் களஞ்சியமாக விளங்கிய நூல்கள் எரிக்கப்பட்டன. இது பங்களாதேஷ் விடுதலைப் போரின்போது நடாத்தப்பட்ட "அறிவாளிகள் கொலைக்கு" எந்தவகையிலும் குறைந்ததல்ல. இவர்கள் எதை எதிர்பார்த்து இதைச் செய்தார்களோ அதற்கு மாறாக எமது சுதந்திரம் பற்றிய கோரிக்கையானது மேலும் வலுப்பெற்று வருகிறது. சந்ததி சந்ததியாக தமிழ் ஈழத்திற்கு வெளியே வாழ்ந்தவர்கள் கூட இன்று தமிழீழத்தில் வாழப்புறப்பட்டு விட்டார்கள்.

"1977 இனக்கலவரத்தில் நாம் வடக்கில் கூட வாழ முடியாத நிலையை உருவாக்க முயன்றார்கள். அங்கிருந்துகூட நாம் சுதந்திரத்திற்கு குரல் கொடுக்க முடியாதா என்ற கேள்வி எழுந்துள்ளது. அஹிம்சை முறையில்தான் நாம் எமது போராட்டங்களை அமைத்துக் கொண்டாலும் வன்செயல் தாக்குதல்களிலிருந்து எம்மை நாம் காப்பாற்றிக்கொள்ள அதற்கு ஏற்றதான சில வழிமுறைகளையும் கற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

காணாத வெற்றி 1977ல் 18 தொகுதிகளில் ஏற்பட்டது. இந்த எழுச்சியை அடக்கப் பலரது சிந்தனையில் ஏற்பட்ட வெறித்தாக்கம்தான் ஆவணியில் ஏற்பட்ட வெறித்தாக்குதலாகும். இந்தக் கட்டத்தில் எமது கப்பல் உடையுமா என்று எதிர் பார்த்தார்கள். ஆனால் நாம் அந்த சூறாவளியிலிருந்து கப்பலைக் காப்பாற்றினோம். இத்தாக்குதலிலிருந்து நாம் பல பாடங்களைப் படிக்க வேண்டும். 1958இல் எம் மண்ணிலிருந்து எதிர்த்தாக்குதல் நடத்தினோம். ஆனால் 1977ல் எம்மண்ணிலேயே தாக்கப்பட்டோம். அவசரப்பட்டு நடவடிக்கைகளில் இறங்கி எம்மக்களை மேலும் ஒரு நூற்றாண்டு காலத்திற்கு அதளபாதாளத்தில் தள்ளிவிட முடியாது இன்று எமது நிலை கத்திமுனையில் நடப்பதைப் போன்றது ஆனால் நடந்தே தீரவேண்டிய நிலை. விடுதலைப்பயணத்தில் நேரே எதிர்ப்பட்ட பாறையை விலக்கி கப்பலைச் செலுத்துகிறோமே தவிர பாதையை மறந்து நாம் செல்லவில்லை. தந்தை காட்டிவிட்டுச் சென்ற பாதையைத்தவிர வேறுபாதையில் செல்ல எந்தவகையிலும் எத்தனிக்கமாட்டேன்.

### திருகோணமலை சம்பந்தர்

இதன்பின்னர் திருகோணமலைப் பிரதிநிதி இரா. சம்பந்தன் அவர்கள் உரையாற்றினார்கள், அவர் தமதுரையில், கூறியதாவது:-

"திருமலையை தலைநகர் என்று கூறினால் மட்டும் போதாது. திருமலை இன்று பெரும் ஆபத்தான நிலையில் உள்ளது. அதை உணர்ந்து அதைக்காக்க முன்வரவேண்டும். இந்தநாடு சுதந்திரம் [illegible] சுதந்திரத்துடன்

### அஞ்சல்முரசு வெளியீடு!

அஞ்சல் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்கள் சங்கம் 'அஞ்சல் முரசு.எனும் தமது சங்க ஏடொன்றை வெளியிடத் தொடங்கியுள்ளது. அண்மையில் மட்டக்களப்பில் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் திரு. ஐ. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெற்ற ஆண்டுக் கூட்டத்திலேயே இச் சஞ்சிகை முதன் முதலாக வெளியிடப்பட்டது.

### கொழும்பு தமிழ் மக்களின் உதவி!

செல்வா நினைவாலய நிதிக்காக கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற பெரியவர் விழாவிலும்,மாநகரிலும்சேர்ந்த நிதியாக ரூபா1905/கோப்பாய்த் தொகுதி பா.உ. அவர்களிடம், கொழும்பு தமிழ் இளைஞரி பேவையை சேர்ந்த திரு. ஆ. இரகுபதிபாலஸ்ரீதரன் அவர்களால் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி நினைவாலய நிதிக்காக முன்னர் கொழும்பில் நடைபெற்ற எழுச்சி விழாவிலும் ரூபா 2000 சேர்க்கப்பட்டு வழங்கப்பட்டமை தெரிந்ததே,

சன்சயின்
சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
-இது ஓர் லாலா தயாரிப்பு-
லாலா சோப் தொழிற் சாலை
அச்சுவேலி

இப்பத்திரிகை கொழும்பு-12, 194 ஏ, பண்டாரநாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் நிறுவனத்தாரால் 1978ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுவெளியிடப்பட்டது: அச்சுப் பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org